## *BSNLஐ பாதுகாப்போம்! தேசத்தை பாதுகாப்போம்!!*
## *பாரத பிரதமருக்கு மனு*

*பெருமதிப்பிற்குரிய ஐயா,*

தொலை தொடர்பு பொதுத்துறை நிறுவனமான BSNL கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ச்சியாக நஷ்டம் அடைந்து, மிகப்பெரிய நிதி நெருக்கடியில் உள்ளதை தாங்கள் நன்கு அறிவீர்கள். அதற்கு மிக அவசரமாக தேவைப்படுகின்ற மொபைல் மற்றும் இதர கருவிகள் இல்லாத காரணத்தால் அதன் விஸ்தரிப்பும், மேம்பாடும் இல்லாததோடு அதன் சந்தை பங்கீடும் 10 சதவிகிதமாக குறைந்து விட்டது.

தனியார் நிறுவனங்களிடமிருந்து பற்றாக்குறை இணைப்புக் கட்டணம் ADC (Access Deficit Charges) வசூலிக்கப்பட்டு BSNL நிறுவனத்திற்கு நிதி உதவி செய்யப்படும் என BSNL உருவாகும் போது உறுதி அளிக்கப் பட்டது. மேலும் அரசுக்கு BSNL நிறுவனம் கொடுக்கும் உரிமக்கட்டணம் திருப்பித்தரப்படும் என்றும் உலகளாவிய சேவை பொறுப்பு நிதியகம் (Universal Service Obligation Fund)ல் இருந்து BSNLக்கு தாராள மானியம் வழங்கப்படும் என்றும் வாக்குறுதி வழஙப்பட்ட்து. ஆனால் இவை அனைத்தும் நிறுத்தப்பட்டு விட்டது அல்லது மிகப்பெரிய அளவில் குறைக்கப்பட்டு விட்டது. இதே நேரத்தில் BSNL நிறுவனத்தின் கையிருப்பாக இருந்த சுமார் 40,000 கோடி ரூபாய்களை ஸ்பெக்ட்ரம் கட்டணம்(18,500 கோடி ரூபாய்கள்), உத்தேசக் கடன்(NOTIONAL LOAN 7,500 கோடி ரூபாய்கள் மற்றும் அதற்கான வட்டி 14.5%), உரிமக் கட்டணம் போன்றவைகளுக்காக அரசு எடுத்துக் கொண்டது. இவ்வாறாக முதல் ஐந்தாண்டுகளில் ஒட்டு மொத்த லாபமாக 45,000 கோடி ரூபாய்களை அடைந்து அரசுக்கு நல்லதொரு ஈவுத் தொகையையும் கொடுத்த BSNL நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளாக 28,000 கோடி ரூபாய் ஒட்டு மொத்தமாக நஷ்டம் அடைந்துள்ளது. அதன் காரணமாக போனஸ் மற்றும் பல சமூக நலத்திட்டங்களான மருத்துவப்படி மற்றும் LTC போன்றவை நிறுத்தப் பட்டுள்ளது அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. BSNL ஊழியர்களும் அவர்களின் தொழிற்சங்கங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவையை மேம்படுத்த அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் கருவிகள் பற்றாக்குறை மற்றும் தொடர்ச்சியான அரசாங்கங்களின் பொதுத்துறை விரோத தனியார் ஆதரவு கொள்கைகள் காரணமாக BSNLன் புத்தாக்கம் பல்வேறு தடைகளை சந்திக்கிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து BSNL நிறுவனம் மீளவும், பொதுமக்களுக்கு மேம்பட்ட சேவைகளை தருவதற்கும், கீழ்கண்ட கோரிக்கைகளை உங்களின் பரிசீலனைக்கும், உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நாங்கள் முன்வைக்கிறோம்.

*கோரிக்கை சாசனம்:-*

- பல மாத காலமாக காலியாக உள்ள CMD/BSNL, DIRECTOR(FINANCE) மற்றும் DIRECTOR(HR) ஆகிய பதவிகளை உடனடியாக நிரப்ப வேண்டும்.
- BSNL *நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் உருவாக்கத்தை கைவிட வேண்டும்.*
- *கிராமப்புற மற்றும் தொலை தூர பகுதிகளுக்கான சேவைகளால் ஏற்படும் நஷடத்தை ஈடுகட்ட வேண்டும்.*
- *விஸ்தரிப்பு மற்றும் மேம்பட்ட சேவைகளுக்கு தேவையான கருவிகளை உடனடியாக வாங்க வேண்டும்.* TRANSMISSION NETWORK*ஐ பலப்படுத்த* OFC *கேபிள்கள் போடுவதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.*
- BSNL *ன் சொத்துக்களை அதன் பெயருக்கு மாற்றித்தர வேண்டும்.*
- BSNL-MTNL *இணைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்.*

- BSNL நிறுவனத்திற்கும் அலைக்கற்றை தாராளமயமாக்கல் மற்றும் வர்த்தகத்திற்கு அனுமதி வழங்க வேண்டும்.
- DOTயிலிருந்து BSNLல் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கான ஓய்வூதிய பங்குத் தொகையினை ஊதியவிகிதத்தின் உயர்ந்த பட்ச அளவு என்பதற்கு பதிலாக உண்மையான ஊதியத்தின் அடிப்படையில் பெற வேண்டும்.
- BSNL இடம் உள்ள 900 MHz PREMIUM அலைக்கற்றையில் 1.2MHz ஐ திருப்பி வழங்க BSNLஐ கட்டாயப்படுத்தும் TRAIயின் பரிந்துரையை நிராகரிக்க வேண்டும்.
- டிலாய்ட்டி கமிட்டி பரிந்துரையை நிராகரிக்க வேண்டும்.
- BSNL க்கு இலவசமாக அலைக்கற்றை ஒதுக்கீடு செய்ய வேண்டும்
- BSNL தனது NETWORKஐ விஸ்தரித்துக் கொள்ள நிதி உதவி வழங்க வேண்டும்.
- BBNL நிறுவனத்தை BSNLஉடன் இணைக்க வேண்டும்.
- 4G சேவைகளை BSNL துவங்க வேண்டும்.
- BSNL நிறுவனம் திருப்பி கொடுத்த BWA ஸ்பெக்ட்ரத்திற்கான கட்டணத்தை அரசு உடனடியாக திருப்பித்தர வேண்டும்.
- 2007க்கும் முன்பும் பின்பும் ஓய்வு பெற்றவர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு செய்ய வேண்டும்.
- BSNL ஓய்வூதியதாரருக்கு ஓய்வூதிய மாற்றம் செய்ய வேண்டும்.
- புதியதாக ஆட்களை வேலைக்கு எடுக்க வேண்டும்.
- மத்திய மாநில அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் BSNL சேவைகளை பயன்படுத்துவதை கட்டாயப்படுத்த வேண்டும்.
- ITI நிறுவனத்திடமிருந்து பொருட்கள் கட்டாயமாக வாங்க வேண்டும் என்ற நிபந்தனை நீக்க வெண்டும்.
- BSNLன் நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வூதிய பலன்கள் விஷயத்தில் மத்திய அமைச்சரவையின் முடிவை அமுல்படுத்த வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

| வரிசை எண் | பெயர் | பதவி | கையெழுத்து |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |